ஓலை 45 | ஓசை 159 | கன்னி(செப்டம்பர் ) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.**

எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும்,
அவ் வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

**Translation:**

Whate'er you ponder, let your aim be loftly still,
Fate cannot hinder always, thwart you as it will.

**Explanation:**

In all that a king thinks of, let him
think of his greatness;
and if it should be thrust from him (by fate),
it will have the nature of not being thrust from him.


/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
# இலக்கியப் பேரவை

## நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

## இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

## வடிவமைப்பு

அ.வில்சன்


## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# வாழ்க்கை

வாழ்க்கை ஒரு வாய்ப்பு
வாழ்ந்துகாட்டு வரலாறாகட்டும்
வாழ்க்கை ஒரு பயணம்
வழியை நீயே தேர்ந்தெடு



வாழ்க்கை ஒரு புத்தகம்
புரட்டிப்பார் உண்மை புரியும்
வாழ்க்கை ஒரு புதையல்
மீண்டும் மீண்டும் தோண்டி எடு

வாழ்க்கை ஒரு அலைகடல்
தண்ணீரோடு முத்தும் உண்டு
வாழ்க்கை ஒரு ஆலயம்
உனக்குள் நீயே கடவுளைத் தேடு

வாழ்க்கை ஒரு இமயம்
மேடு,பள்ளம் அதிகம் உண்டு
வாழ்க்கை ஒரு உதயம்
இருளில் நீயே ஒளியாய் மாறு

வாழ்க்கை ஒருவித அன்பு
அனைவரிடமும் அதை பகிர்ந்து கொள்
வாழ்க்கை ஒரு நல்வரம்
ஒருமுறைதான் கிடைக்கும் பயன்படுத்திக்கொள்.

வாழ்க்கை ஒரு மெல்லிசை
காதிலே தேன்துளி அள்ளித் தெளிக்கும்
வாழ்க்கை ஒரு தீவிர விசை
அதிலே நீயும் நியூட்டனாய் வாழு

கவிஞர் ச.நந்தினி,பேரூர்

# காக்கும் கடவுள் திருமால்

பா வகை - இருமுச்சீரிரட்டை வியநிலை சிந்து

முல்லை திணைக்கு - அதிபதியே
முகுந்தனாய் வந்த பேரொளியே
நல்லவை கூறிட - அவதரித்தாய்
நந்தனே கருவண்ண மேனியனே

சங்குச் சக்கரம் - சுழன்றிடுமே
சக்கர பாணி விரலினிலே
பொங்கும் பக்தியில் - காட்சிதந்தான்
பொய்கை ஆழ்வார் இடங்கழியில்

பாற்கடல் மீதினில் - பள்ளிகொள்வான்
பரந்தாமன் உலகை காத்திடுவான்
போற்றுவோம் நாமும் அச்சுதனை
பொழியட்டும் இன்பம் மழையெனவே

கர்ம வினையின்றி - பிறப்பெடுத்தான்
கண்ணனாய் அவனும் கீதைதந்தான்
மர்ம முடிச்சுகள்- போட்டிடுவான்
மகாபாரத போர் வென்றான்

புல்லாங் குழலை- இசைத்திடுவான்
பூமியில் இனிமையை பரப்பிடுவான்
பொல்லா ராவணன் - அழித்திடவே
புண்ணிய ராமனாய் அவதரித்தான்

ஒருத்தனுக் கொருத்தி- எனும்பண்பை
உயர்வாய் வாழ்ந்தும் காட்டியவன்
இருடிகேசனே கள்ளழகா- இராமனே
இரங்கனே உலக ளந்தான்

மோகினி யாக -உருமாறி
மொட்டும் அவிழ்த்தாய் ஐயப்பனை
நாகமாம் ஆதி- சேஷனையும்
நண்பனாய் கொண்டவன் நீயன்றோ

உன்னை பாடிடும்- வரமொன்றால்
உயர்ந்ததே நாவும் உறுப்புகளில்
என்றும் கோவிந்தா- உனைதுதித்தே
ஏற்றம் கண்டிடும் என்வாழ்வே

திதிபரா திருவாளா - திருவேங்கடா
திருமகள் கொழுநா நாரயணா
மதியால் விதியை- வென்றிடவே
மாயப் பாடங்கள் சொன்னவனே

மரகத மேனியன் - மாதவனே
மகா விஷ்ணுவே மணி வண்ணா
நரசிம்மன் முத்தனே - நளினாபதி
நட்சத்திர நேமி நீலவண்ணா

சொன்னவண்ணம் செய்த -பெருமாளே
சுணக்கம் தீர்க்க அருள்வாயே
கன்னல்மொழி தமிழால் - பாடுகிறேன்
காத்திட வேண்டும் கடல்வண்ணா

நாராயண புகழைப் - பாடிவந்தால்
நாளைய பிறப்பும் அறுபடுமே
சாரங்கா சதுப்புயா - சாரதியே
சார நாதனே சிறீனிவாசா

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# நாளைய பாரதம்

மனவெளிச்சத்தில் தெளிவாகத் தெரியும்
என் தேசத்தை
விழிகள் இரண்டால்
வியந்து பார்க்கிறேன்
உண்மை சுடுமெனத் தெரிந்தும்
உரக்கச் சொல்கிறேன்

நாளைய சந்ததியின்
விடியலுக்கான வெளிச்சத்தை
அன்னை தேசமெங்கும்
ஆர்பரித்தோடும் மேற்கத்திய
நவீன ஆறுகளால்
பச்சையங்கள் துளிர்க்காமலே
பசியாறும் அடுத்த தலைமுறைகள்

அறங்களும் மனிதநேயமற்ற
அவசரநிலை வாழ்வில்
பொருளொன்றே இலக்கென
ஆரோக்கியத்தையும் அடகுவைக்கிறது

காணுமிடமெங்கும் ஆலைகளும்
நெடுஞ்சாலைகளுமென நீண்டுகிடக்க
விளை நிலங்களெல்லாம்
சட்டைப்பைக்குள் சுருண்டு கிடப்பதால்
மாத்திரைகளே திட்டமிடுகிறது
உயிர்களின் உணர்வை.

நெகிழிப்பைகளுக்குள் விளையும்
மரபணு மாறியவிதைகளால்
கருப்பைகளும் விதைப்பைகளும்
வீரியமற்றுத் திரிய
கலப்பைக்கும் கழனிக்கும்
அவசியமில்லாமல் போகிறது.



இல்லந்தோறும் வாரிசுகளாய்
செயற்கை நுண்ணறிவு எந்திரங்களே உறவாட
பிள்ளைப் பெறுவதும்
பெருந்தொகைகளால்தான் சாத்தியமாகும்
மரமும் நிழலுமில்லாத
பூமியில் உயிர்வாழ
அனைத்து கடைகளிலும்
ஆக்சிஜன்உருளைகளும் விற்பனைக்கு

மனிதஇனத்தின் அசைவுகளை தீர்மானிக்கும்
கார்பரேட் விரல்களால்தான்
இயற்கை வளங்களின் ஆயுளும்
எழுதப்படுகிறது

இயற்கையின் வேரினையறுத்து
செயற்கை முறையில்
நெகிழிப் பண்டங்கள்
நெருங்கி வருவதை உணர்ந்திடுங்கள்

விண்ணைத்தொடும்
இளைஞர்களே
நாளைய பாரதத்தைக் காக்கும்
நம் பாரம்பரியத்தையும்
மண்ணில் சேமித்து வையுங்கள்

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# நாளை வருவான் ஒரு மனிதன்

நாளை வருவான் ஒரு மனிதன்
நாற்றிசையும் பறையொலிக்க
நாளை வருவான் ஒரு மனிதன்.



உள்ளத் தெளிவின் வீச்சோடு
கள்ளமற்றப் பரிவோடு
பள்ளத்தில் சேரும் நீராய்
நாளை வருவான் ஒரு மனிதன்.

மதியினால் உயர்ந்து நின்றிட
மதிபோல் தண்ணொளி பரப்பியே
விதியே என்றிருப்போரை மாற்றிட
நாளை வருவான் ஒரு மனிதன்.

ஒற்றுமையை உயர்வாய் எண்ணியே
உயிர்மூச்சாய்த் தேசத்தைக் காத்திடவே
இதயத்தில் நாட்டுணர்வைப் பதித்திடவே
நாளை வருவான் ஒரு மனிதன்.

சாதிப்பிரிவினை அகற்றிடவே
சமரசத்தைப் போதித்திடவே
நீதி தன்னை நிலை நாட்டிடவே
பசிப்பிணி போக்கிடத் தருமசாலை நிறுவிட
நாளை வருவான் ஒரு மனிதன்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# நேர்மை

கனன்று எரியும்
நேர்மையின் நெருப்பு
ஒவ்வொருவர் மனதிலும்
நிறைந்து இருந்தால்
அழிந்திடுமே அநியாயங்களும்
ஆணவங்களும்!
மலர்ந்திடுமே அன்பும்
இப்பூவுலகில்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# மாற்றங்களை கண்டு மிரளாதே




இரவு பகல் மாறி வரும்
இரவே இங்கு வாழ்வென்பது இல்லை
இருளும் அகலும் தினம் தினமே
இதனை அறிந்தால் புரிந்திடும் உண்மை.

அன்பு காட்டி கட்டிப் போடும்
அதனை நம்பி அன்பில் மூழ்கி
அனைத்தையும் மறந்து அதனுள் செல்ல
அடுத்து வந்திடும் வெறுப்பால் துன்பம்.

தேவைக்கு மட்டும் வந்திடும் உறவு
தேன் போல் பேசிப் பழகி
தேள் போல் கொட்டிடும் உன்னையே
தேவை முடிந்ததும் தேவையற்ற துரும்பாக்கிடுவாயே.

ஏழையாக இருந்த உற்ற நண்பன்
ஏழ்மை போய் பணம் வந்ததும்
ஏழ்மை நிலை மறந்து போய்
ஏரெடுத்தும் பார்க்காமல் ஒதுக்கி தள்ளியே
ஏளனமாக பார்த்து பார்வையாலே கொள்கிறான்.

வாழ்வில் வரும் மாற்றங்கள் யாவும்
வாழ்க்கைக்கு புதுப் புது பாடமே
வாழ வேண்டிய நீ அறிந்திடு
வாழ்வில் வரும் மாற்றங்கள்
வாழ்வின் புது அத்தியாயங்கள்.

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# சந்திப்பு

நாம்
சந்தித்துக் கொண்ட
முதல் சந்திப்பில்
மாற்றங்களேதுமில்லை
அடுத்த சந்திப்பில்
ஒரு சில மாற்றங்கள்
நிகழ்ந்தது நம்மில்.
பிரிதொரு
சந்திப்பில் தான்
பெரியதொரு மாற்றங்கள்
நிகழ்ந்தன நமக்குள்
இறப்பிற்கு
முன் நிகழும் சந்திப்பே
இறுதி சந்திப் பென்றாகும்
நமக்கு.
அப்போது
நமது சந்திப்பில்
மாற்றங்களேதுமற்று
இமைகசியும் ஈரத்துளிகளில்
பூரண அன்பு
நிச்சயம் மலர்ந்திருக்கும்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# நேர்மை

நல் தமிழ் காதலைனையும்,
நால்வாய் விலங்கதுவும்,
நிறைகுட மனிதனையும்,
நீண்ட நாள் வாழவிடாமல்,
நுரைதள்ளும் தும்பிக்கையால்,
நூறு ஆயுளை அற்ப ஆயுளாக,
நெட்டில் தள்ளி வளைத்து,
நேரம் விடாது உயிர் பறித்து,
நையக் கோவில் வாயிலிலே,
நொந்து வலியோடு ,
நோயற்ற உடல்தனை,
காலனும் கொண்டு சென்றான்.
நேர்த்தி கவிஞனையும்,
நேர்மை தமிழனையுமே!



கவிஞர் நீலா சுபாஷ்


# தண்ணீர்

மனிதா நான்
தண்ணீர்
பேசுகிறேன்.
ஆழ்துளைகள்
போட்டு என்னை
தேடுகிறாய்.

மழையாய்
வரும் என்னை
சேமிக்க
மறுக்கிறாய்

உன்னுடைய
தொழில்நுட்பத்தையும்
விஞ்ஞானத்தையும்
பயன்படுத்தி,
என்னை சேமிக்க
வழி செய்.
நான் எப்பொழுதும்
உன்னுடன் இருக்க
ஆசைப்படுகிறேன்.

என்னுடைய
வரவுக்காக
தெருக்கள் தோறும்
வண்ணக் குடங்கள்
காத்திருக்கின்ற.



கவிஞர் ஜெ.தேவிராஜாசேகர்,சென்னை

அகர முதல

# பெட்டை நாய்க் குட்டி

பெயர் பெற்றா தெருநாய்
அவதான் என்ன பெற்றதாய்.
பெத்துப் பொட்டா நாலுகுட்டி
நான்வந்து பெட்டக் குட்டி

பண்ணையார் வீட்டில் கறுப்புக் குட்டி
பவலம்மா வீட்டில் கடைசிக் குட்டி.
ஊருபூரா கொடுப்பார் வட்டி
அவர் வீட்டில் வெள்ளைக் குட்டி.



யாரும் வந்து தூக்கவில்லை
தாயவளோ பார்க்கவில்லை.
சாலையோரம் படுக்கிறேன்
சகதியிலே கிடக்கிறேன்.

சாலைவண்டி அடிக்குது
சாந்திப்பையன் மிதிகிறான்.
சாப்பிட்ட எச்சத்தை
சாப்பாட்டு பிழைக்கிறேன்.

பாதிவயிறு நிரப்பவே
பாடுபட்டு போகிறேன்.
பாவிமனுசன் கண்ணில்
பட்டுத்தான் தொலையிரே.

அச்சத்தின் உச்சத்தில் நானும்.
எச்சினை உமிழ்கிறார் பாரும்.
பெண்ணென்று சென்னாலே
பின்னலையும் ஆடவர்.

பெட்டைநாய் என்றாலே
முன்னடித்து துரத்துறார்.
குட்டையிலே கொட்டுறார்,
கும்மிருட்டில் விரட்டுறார்.

அடைமழை அடிக்கையிலும்
அடித்தல்லோ விரட்டுறார்.
சுழித்தோடும் ஆற்றிலே
தலையை சுற்றி எறிகிறார்.

தங்கிச் செல்ல வந்தவரே
எமக்கும் சொந்தம் இந்த பூமி.
வாழும் வரை வாழவைத்து
வந்தவழி போயிடுமே.

கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு, இலங்கை

# ஊக்கம் உடைமை

(அதிகாரம் : 60)




உரியதென்பது ஒருவர்க்கு
ஊக்கமேயல்லாது வேறில்லை.
அஃதில்லாது எஃதையவர்
பெற்றிடினும் அதுவீணே.

நிலைதனமும் நிறைசெல்வமும்
ஊக்கம் ஒன்றேயாம்.
மற்றெல்லாம் நிலையின்றி
நீங்கிடும் வளங்களாம்.

ஊக்கமெனும் உறுதியுடையோர்
ஆக்கச்செல்வம் இழந்தகாலத்தும்.
தாக்கமாய் அஃதெண்ணி
ஏக்கம் கொள்ளார்.

நெஞ்சத்துள் தளராத
திடனூக்கம் கொண்டோனிடம்.
பெருஞ்செல்வம் தானேவந்து
வழிகேட்டு வீடுநிறைக்கும்.

நீர்ப்பூக்களின் தண்டது
நீரளவைப் பொருத்தார்போல்.
ஒருவனின் உயர்வளவும்
ஊக்கத்தின் அளவானதேயாம்.

எந்நேரமும் எண்ணமெல்லாம்
உயர்வுபற்றி இருத்தல்நலம்.
உயர்நிலை கூடாவிடினும்
ஊக்கமதை விடாதிருத்தல்நலம்.

உடலெல்லாம் அம்புதைத்தும்
திடமாய்நிற்கும் யானைபோல்.
விடமாய் துன்பம்வரினும்
ஊக்கமுடையோர் மனந்தளரார்.

வள்ளண்மை உடையோமெனும்
இறுமாப்பில் மகிழ்நிலையை.
ஊக்கமில்லா மனமுடையோர்
ஒருபோதும் அடைந்திடார்.

பேருடலும் கூர்பல்லுமுடைய
தோற்றங்கொண்ட யானையும்.
பெருந்திடமாம் ஊக்கமுடைய
புலிக்கு அஞ்சிநடுங்கும்.

மனவலியென்பது ஒருவர்க்கு
திடமான ஊக்கமேயாம்.
அவ்வூக்கமில்லா மக்கள்
தடிமரம் போன்றோரே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# விடியாத இரவுகள்

விடியாத இரவுகள்
விலகாத நினைவகள்

வில்லை வளைத்து
விதியை மிதித்தனர்

விரலால் கோலமிட
வித்தைகளை காற்றிலே

விசைகளை புவியீர்ப்பின்றி
விண்ணில் தள்ளலாம்

விழலுக்கு இறைத்த
விசையின் நீராய்

வீணான இசைகளை
வீணையில் தேடுகிறோம்

வெண்ணிலவின் முற்றத்தில்
வெறுமனே விசுறுகிறோம்

இரவு விடியவில்லையா
இன்னும் விடைகளில்லை



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

அகர முதல

அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# சிலப்பதிகாரம் (பத்து)

1. கோவலனும் கண்ணகியும் மதுரை செல்வது :
ஊழ்வினை உள்ளத்தில் புகுந்து துரத்த மதுரை பயணம்
வாழும் முறைதேடி மதுரை நோக்கி நடந்து செல்கிறார்கள்
கீழ் விளங்கும் புத்தன், மேல் விளங்கும் திருமால் வணங்கி
விழா நடைபெறும் ஊர்களையும் கடந்து செல்கிறார்கள்
( விளங்கும் — ஒளிர்தல் )
மதுரை தொட்டுவிடும் தூரம் தான் என நடந்தாள் கண்ணகி
"இதுவரை நடந்ததுபோக இன்னும் எவ்வளவு தூரம் போகனும்?"
அதுவரை வந்தவளுக்கு ஆறுதலாக ஆறைந்து காதம் என்றான்
மதுரை முப்பது கல் என்பதை முறுவலுடன் கூறினான் அவன் .

2. வழியில் கவுந்தியடிகளை துணையாக கொள்ளுதல் :
சோலையில் கவுந்தி ஐயையைக் கண்டு அடிதொழுதனர்
"சாலையில் நடந்து செல்லும் தாங்கள் யார் என கூறலாமா?
தொலைதூரம் வந்த களைப்பு முகத்தில் தெரிகிறதே
வேலை நிமித்தம் யாதும் தடையில்லை எனில் கூறுங்கள்"

"தவச்சீலரே நாங்கள் பொருள் ஈட்ட மதுரை செல்கிறோம்"
அவன் மொழி கேட்ட கவுந்தியடிகள் முகத்தில் சோகம்
"தேவதை போல் காணும் உன் பாதங்கள் நடந்தறியாதவை
சிவிகையில் பயணிக்கனும் விதியின் விளையாட்டு இது?"


"துடி இடையாள் துவண்டு துன்புறுகிறாள் வேண்டாம் இப்படி
கடிது நான் சொன்னாலும் மனம் வருத்தப் படுவீர்கள் நீங்கள்
இடி கேட்ட நாகம் போல் நடுங்கும் இவள் வழித்துணையாவேன்
விடியல் தேடி திக்கற்று அலையும் உங்களுக்கு ஆறுதலாவேன்"

"துணையாக தங்கள் வருகை இவள் துன்பம் தீர்த்தவனாவேன்
இணைந்து செல்லும் எங்களுக்கு இப்பயணம் வழி அறியாது
கணைக்கால் வலியுடன் வரும் இவள் இன்னலுக்கு நானே காரணம்
அணையார்முன் எங்களைக் காத்து வழி நடத்துங்கள் தாயே"
( அணையார் — பகைவர் )
வெப்பமான மணல் சாலை இவள் பூப்பாதங்கள் கருகிவிடும்
தெப்பமாக வியர்வையில் நனைந்து இவள் தேகம் கருத்துவிடும்
உப்பளப் பாதை சிறு கற்கள் நிறைந்தது கடப்பது கடின மாகும்
எப்பகுதியும் சிரமங்கள் கொண்டவைதான் பொறுத்தருள வேண்டும்

"வயல்வழிகள் கிழங்குகள் எடுத்து குழிப்பள்ளங்கள் நிறைந்தவை
கயல் விளையாடும் வயல் நிலங்களையும் நீர் தவிர்க்க வேண்டும்
புயல் காற்று வீசும் கடல் ஓரங்களும் சாதகமாக அமையாது
அயலார் சிரமம் தவிர்த்து அழைத்துச் செல்கிறேன் வாருங்கள்"

3. நடை பயணம்:
பிச்சைப் பாத்திரம் , மயில் தோகையுடன் அடிகள் முன்னே செல்ல
அச்சத்துடன் கோவலனும் கண்ணகியும் பின் தொடர சென்றார்கள்
துச்சமாக நினைத்து இடர்கள் தாண்டி மதுரை விரைந்தார்கள்
பச்சைக் கம்பளம் விரித்ததுபோல் நாற்று தலையசைத்து ஆடியது

வேதியர்கள் வேள்விப் புகை கரும்பாலைப் புகை கரு மேகமாக
சதி செய்ததுபோல் ஊரே இருளில் மூழ்கி வழித்தடத்தை மறைத்தன
விதியில் சிக்கிய இவர்கள் கவுந்தியடிகளைப் பின் தொடர்ந்தார்கள்
புதிதாக தீய தூமகேது வால் நட்சத்திரம் தோன்றி அச்சுறுத்தியது



தொடரும்...

கவிஞர் ந.திருக்காமு

# தீராக் காதல்

தமிழ்ச்சுரங்கத்தில்
தோண்டிக் கிடைத்த சொற்களால்
நான் எழுதிய காதல் கடிதத்தை
மனப்பாடம் செய்து
ஒப்பித்துக் கொண்டிருக்கிறது
இரவு முதல் காலை வரை
அவளிடம் இந்த மழை
இன்னும் முடியவில்லை.




கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்



அகர முதல

# மூங்கில்கள்

தலைமுறைக்கு ஒருமுறை அவிழும்
உந்தூழ் மலரே.
அரிதாய் மலர்ந்து
அகத்தினிலே
பெரிதாய் நிற்கிறாய்.

நள்ளியைப்போல
அள்ளிக் கொடுக்கும் வள்ளல்.
பாரினில் விளையும்
பச்சைத் தங்கம்.
பணமென்றால் என்னவென்று தெரியாத
வனவாசிகளின் வாழ்வாதாரம் நீ.

உயர்ந்து வளரும் புல்லினம்.
உன்னையே
வளர்ச்சிக்கு உதாரணமாகக் கூறுவர்
எங்கள் மெல்லினம்.

பஞ்ச காலத்திலே
நெஞ்சம் நிறைய
மூங்கில் அரிசியைப்
பாங்காய் கொடுத்தாய்.

உயிர்வளியை
ஒருபாடு கொடுக்கும்
உயர்ந்த கொடைக்குணம்.

புல்லாங்குழலாய்
எல்லா இடங்களிலும் இசையால்
வசியப்படுத்துவாய்.
அஃறிணைகளும்
உன்னால் ஆனந்தமடையும்.

மலைப் பகுதிகளில் மட்டுமே
இலை விரிக்கிறாய்.
சங்ககாலம் முதல்
சாரம் கட்டி உன்மீதமர்ந்தே
உயர்ந்த கோபுரங்கள்
உருவாகின.

மதிப்பில் உயர்ந்த
மரங்களில் சாதியே
பதிவில் உனையெழுத
எனக்கின்னும் மீதியே.

இன்று உலக மூங்கில் தினம்

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# அலையாய் எழு

பெண் சீற்றம் கொண்டு எழுவாள்
புயலாய் மாறி வீசிட வைப்பாள்
பாரினில் புகழை நிலை நாட்டுவாள்
எண்ணிய காரியத்தை முடித்தே காட்டுவாள்

எதற்கும் அஞ்சாமல் நிலையாய் நிற்பாள்
புறம் பேசுபவரை வீசி எறிவாள்
புண்ணியத்தை தேடிக்கொண்டு செல்வாள்
ஆற்றல் உள்ள வரை வாழ்வாள்




வீட்டினுள் முடங்கிய காலம் இல்லையடா
தலை நிமிர்ந்து வாழும் காலமடா
உலகத்தை எல்லாம் சுற்றி பார்ப்போமடா
நிலவுக்கே சென்று வெற்றி பெறுவோமடா

பல கலைகள் எல்லாம் கற்றிடுவாள்
பார் போற்ற வாழ்ந்துக் காட்டுவாள்
வீறுக் கொண்டு எதையும் முடித்திடுவாள்
எல்லையில்லா எல்லைக்கு சென்றுக் காட்டுவாள்

அலை கடலிலும் எழும்பி விடுவாள்
புயல் மழைக்கு அஞ்ச மாட்டாள்
தன்னம்பிக்கையோடு தரணியில் வாழ்ந்து விடுவாள்
சாதித்து சகாப்தம் படைத்து விடுவாள்

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# சாதனையாளர் நீ!



சாதனை சிற்பிக்குள்
பிறந்த முத்து நீ
தோல்வியை கண்டு அஞ்சாதே
நெஞ்சம் கொண்டவள் நீ
கடலலை போல தொடர்
முயற்சியை கொண்டவள் நீ
சுறுசுறுப்பாய் உழைக்கும்
தேனீக்களுக்கும் எறும்புகளுக்கும்
இவ்வையகத்தில் உவமை நீ
வானில் பறந்து கிடக்கும்
நட்சத்திரங்களைப் போல
பரந்த அறிவு கொண்டவள் நீ
உலகெங்கும் ஒளிபரப்பும் சூரியனைப் போல
அழகிய உதயதாரகை நீ
சிகரத்தின் உச்சி தொடும் அளவு கற்பனையுடன்
வாழும் சாதனையாளர் நீ
உன் வெற்றிக் கொடியை ஏந்தி
உலகை வியக்க வைக்கும் சாதனையாளர்
உனக்கு என் வாழ்த்துக்கள்

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# வெற்றியின் ரகசியம்

ஓவியனின் உத்திகள்
அவன் பயிற்சியிலும்
தூரிகைகளின் நுனியிலும்
வண்ணங்களின் தெரிவிலும்
தெளிவாய்த் தெரியும்




மலர்களின் செழிப்பு
மண்ணின் வளத்திலும்
ஏற்ற தெரிவிலும்
பராமரிப்பின் உயர்விலும்
அழகாய்த்தெரியும்

பிள்ளையின் வெற்றி
பெற்றோர் வளர்ப்பிலும்
ஆசானின் வழிகாட்டலிலும்
பழகும் நட்புக்களிலும்
உறுதி பெறும்.

உலகினில் ஒற்றுமை
இன ஐக்கியத்திலும்
தலைமைகளின் தெரிவிலும்
அழகிய ஆளுமைகளிலும்
மட்டுமே மிளிரும்.

உறவுகளின் பிணைப்பு
விட்டுக்கொடுப்பிலும்
உள்ளங்களின் புரிதலிலும்
உண்மை அன்பிலும்
இறவாது வாழும்.

உள்ளத்தின் ஆரோக்கியம்
நம் செயல்களிலும்
வதனங்களில் தவழும்
புன்னகையிலும்
உறவுகள் அறியும்.

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை


# அவள் கூந்தலில் தாகம்



யார் அவள் ?
யாரோ அவள் !
கார் மேகங்களுக்கிடையே களவு போன கயவன்
நானே
காற்று பிம்பத்தில் விழி மறந்த குருடனும் நானே
அவள் பிறையின் ஒவ்வாமையில் பித்தனும் நானே
அவள் வாடை மோகத்தில் வளவனும் நானே
அவள் குடை பூஞ்சுடரில் குயவனும் நானே
அவள் இதழ் அறையில் மூழ்கிப்போன முதல்வனும் நானே
அவள் சங்கு குழல் சங்க கால சங்கமும் நானே
அவள் மின்னல் நடை வேகத்தில் வேந்தனும் நானே
அவள் கரங்களின் கற்பனையில் கந்தனும் நானே
அவள் கண்களின் காப்பாளனும் நானே
அவள் குருதியின் தொடரில் தொலைந்தவனும் நானே
அவள் மோகத்திர்க்கும் தாகத்திற்கும் மருந்தும் நானே
அவள் ஏக்கத்தை எண்ணிய நேரத்தில் தீர்க்கும் எய்துபவனும் நானே
அவள் கனவிலும் கற்பனையிலும் கணவனும் நானே
அவள் உடல் மொழி அனைத்திலும் உழவனும் நானே
அவள் காதல் முதல் மோதலில் முத்திரையும் நானே
அவள் அன்பின் ஆக்கத்தில் அடியவனும் நானே
அவளை வர்ணித்து வர்ணித்து என் வரிகளும் வலுவிழந்தது அந்நொடி
அவள் கூந்தல் கற்பனையில் களவு போன நொடியில்.

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# பெண்ணியம்



செம்மொழி பழகி
சிரிப்பினை சிதறவிட்ட
பருவமேறி போனது.
எல்லாருக்கும் ரசித்தனர்
சிறுபிள்ளைத்தனத்தை.

நாட்களும் கடந்தோட
நாட்டியங்களும் அரங்கேற துவங்கிற்று!
ஆடலும் பாடலும் ஆகாது
ஆசையின் ஆவலும் ஆகாது
காரணம் கேட்டால்?
மங்கையானதின் மகிமையாம்.

ஆண்களுடன் பேசாதே,
தனியாக செல்லாதே,
சமயலறை தாண்டாதே,
தலைநிமிர நடவாதே,
கட்டுப்பாட்டின் கண்டிப்புகள்
கரைபுரண்டோடுகின்றன.

பொன்னென்றும், பூவென்றும்
வர்ணித்ததின் நிமித்தம் -அவள்
வீரத்தின் விளைநிலம் தரிசானதோ.

நதியென்றும்,
நழினமென்றும்
வடிவமைத்ததின் நிமித்தம்-அவள்
ஜோதியின் மறுவுருவம் மங்கலானதோ.

மென்மையென மெருகேற்றி,
பெண்மையின் வன்மையை
மறைத்து வைத்ததே
கவிஞனின் பேனா முனை கூட.

கவிஞர் டோனா.ஜி,கன்னியாகுமரி

# பொழுது

பொழுது விடிந்ததும்
மதுக்கடை வாசல்
நிற்கும் கணவன்!

உச்சிபொழுதில் பண்டம்
வாங்க ஞாயவிலை கடை
வாசலில் மனைவி

பயிர்கடன் வழக்கு
பிணை வாங்க
நிலம் அடகு!





கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# வறுமையை வென்றிடு

வறுமை அதன் வெறுமை நீக்கி
வலிகள் களைந்து பொறுமை பூண்டு
வதனத்தில் வாட்டம் மறைத்துப் புன்னகைத்து
வந்தனம் கூறும் உள்ளமே பேறு

வண்டதாய்ச் சோகத்தை வாசமாய் முகர்ந்து
வருமிந்த சோதனைகளைச் சாதனைகளாய் மாற்றி
வங்கக் கடலின் ஆழமாய் மனமாகி
வஞ்சித்த மாந்தரும் மலைத்திடும் கனமாகி

வற்றாமல் கிடைத்திடும் தேனாய் இன்பமும்
வலிமையும் படைத்திடும் வறுமையின் சாயலும்
வழிகளைப் பிறப்பிக்கும் விந்தையும் தோன்றுமே
வயிற்றுப் பசியது சிறப்பிக்கும் சான்றுமே

வசீகர வைரமாய் இருளும் நீங்குமே
வடிவாய்ப் பசுமையும் அருளாய்த் தாங்குமே
வம்சமும் தழைத்து வாழ்வு இனிக்குமே
வசந்தம் துளிர்த்து தாழ்வு மறையுமே



வறுமை எண்ணிக் கலங்கித் தளராதே
வருட காலமாய் நாளும் உளராதே
வந்திடும் உன்வசம் ஆளுமை ஆயுதம்
வசதியும் தஞ்சமாய் வாசல் தட்டிடும்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# அந்தி மழை

மழை பெய்யும் மாலை நேரம்
நேரம் போகிறது மழை வருகிறது
வருகின்ற மழையால் மனம் குளிர்கிறது
குளிரும் நேரம் மனதிற்குப் பிடிக்கிறது
பிடித்த நிலவு வானில் தெரிகிறது
தெரிகின்ற நிலவு அழகாய் ஜொலிக்கிறது
ஜொலிக்கும் நட்சத்திரம் மறைந்து போகிறது
போகும் நேரம் பகலாய் மாறுகிறது
மாறும் காலநிலை மாற்றத்தை தருகிறது
மனதை தொடுகிறது மகிழ்ச்சி பிறக்கிறது



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# அவன் குறுநகைக்காக

என்னவன் புன்னகையில்
வீழ்ந்த யுவதி இவள்.
பல நாட்களாய்
நான் காத்திருக்கிறேன்.
அவன் புன்னகையில் எனை தொலைக்க.

நட்பிடம் நகைக்க
தெரிந்த என்னவனுக்கு.
காத்திருக்கும் வஞ்சியிடம்
ஆம்பல் போன்ற அவன் புன்னகையை
உதிர்க்க மறந்தானோ.

மென் குரலோடு அதரம் கதைக்க
ஒரு புன்முறுவலையாவது
உதிர்ப்பானென காத்திருந்தும்
பலனில்லை.

நான் அறிந்திடா கணத்தில்
அதரம் விரித்தே

அகிலம் மறந்து அவன் குறுநகைப்புரிய
ஓரமாய் ஒழிந்தே இரசிக்கிறேன்

என் காதலின் நினைவுகளாய்
இன்று படம் பிடிக்கிறேன்
விழிகளில் இமைக்கொண்டு.

வசியம் செய்தானோ
தாரகையின் மனதையும்
முழுவதுமாய் மறக்கிறாள்
காதலின் எல்லையில் நிற்க.



கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# வேடிக்கையின் சின்னங்கள்

அன்பும் நேர்மையும்
அடங்கிப் போச்சு
ஆணவமும் திமிரும்
பெருகிப்போச்சு

கொடுமையும் கொள்கையும்
கொழுத்து வளர்ந்திடுச்சு
கொட்டும் தேளாய்
மனங்கள் மாறிடிச்சு

அடிமைத்தனம், அகங்காரம்
அடங்காமல் போயிடிச்சு
அடாவடித்தனம் அத்துமீறல்
அனைத்தையும் கொன்றிடிச்சு

கல்விக்கூடங்கள் எல்லாம்
காசு பார்க்கும் இடமாச்சு
காமுகர்கள் பெண்களைச்
சீரழிக்கும் காலமாச்சு

அரசியலும் ஆதிக்கமும்
ஏழைகளை முடக்கலாச்சு
ஆதரவு இல்லாமலவர்
ஏங்கிடும் கூட்டமாச்சு

கோடி கோடியாய்ப்பணம்
கொழித்திடும் கெடுதலாச்சு
கேடுகெட்டவர் கைகளோ
குவலயத்தில் ஓங்கலாச்சு

சாதியும் மதமும் பேதமையில்
சண்டை போடலாச்சு
சமதர்மம் சரிந்தழிந்து
நாசமாய்ப் போயிடுச்சு

பிறர்நலம் கருதாஅவலங்கள்
படையெடுத்து வரலாச்சு
புரையோடும் அநீதிகள்
பாம்பின் விஷம் ஒத்தாச்சு

கயமைத்தனம் வளர்ந்து
கடைவீதி நிரம்பிடிச்சி
கண்ணியமோ கண்ணீரோடு
காடுநோக்கிக் கிளம்பிடுச்சு

நீதியோ நிர்க்கதியாக
நிலைபெறாமல் போயிடுச்சு
நீசங்கள் அரியணையில்
நிமிர்ந்தே தழைக்கலாச்சு


காட்டு விலங்குகளாய்
உருமாறிய இதயங்கள்
காகித மனிதர்கள் பூமியிலே
வேடிக்கையின் சின்னங்கள்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# பூக்கள் பூப்பது ஏன்?

பூக்கள் பூப்பதோ!
அவளின் பூவிழியை பார்ப்பதற்கும்
புன்னகையை
பார்ப்பதற்கும்
பூ போன்ற கூந்தலில்
தன்னை சூட்டிக் கொள்ளவும்
பூக்கள் பூக்கிறதே!



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# மகிழ்வே

நிலா உலாவும்
வேளையில்
நடைப் பயிற்சி
செல்கையில்



வண்ணங்களில்
மலர்ந்து
எண்ணங்களில்
மணம்
சேர்த்திட்டாய்

வனப்புதனில்
நினைப்பெல்லாம்
குவிக்க
விழியிரண்டும்
விலகிட மறுக்க

வெப்பமேறிய
விழிகளுக்கு
குளிர்ச்சியைத் தந்திடும்
வெள்ளரித்
துண்டுகளானாய்

ஆசையாய் ரசிக்கையிலே

இடியோசையை
இதயத்தில் இறக்கி
இமைப்பொழுதில்
இல்லாமல் போனாய்

இருவிழிகளையும்
மகிழ்விக்க
இன்னொருமுறை
வந்துவிடு

வண்ண வண்ண
வான் வெடியே!

கவிஞர் அ.சேவியர்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# அமைதி

அன்பு, அகிம்சை, கருணை, இரக்கம்
இவை யாவையுமே அமைதியின் தத்துவங்களே!
வெண்மை நிறம் உலக சமாதான நிறமாகவே உள்ளது தானே!
உலக மக்கள் அமைதியாகவும், சுகமாகவும் அக்காலத் தொட்டும்
வாழவே பல ஞானிகள், சித்தர்கள் வழி காட்டினார்கள்.
சிந்தனையும், செயல்பாடும் நேர்மையாக இருந்தால் உலகம் உய்யுமே!
பொய்யும், புரட்டும் மனிதனை வீழ்த்தத்தான் செய்யுமே!
ஒரு நாடு, அமைதியாகவும், பொருளாதாரத்தில்
மேன்மையும் அடைய தேவையானது அமைதியே!
அதற்கு மக்களின் நல் எண்ணங்கள், நற்செயல்கள்
அண்டை நாடுகளின் நேசம் இருந்தால் எல்லா
விதத்திலும் வெற்றியே! சண்டை, மழை, புயல்
பல இயற்கை சீற்றங்கள் வேண்டாமே!
ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு அளப்பரிய
சக்தி உள்ளது போல், தீய சக்திகளும் உள்ளனவே!
அமைதியை வேண்டும் போது, கோபமும்,
வெறுப்பும் கூடவே ஒட்டிக்கொள்ளும் தன்மையும் கொண்டதே!
எல்லா குடும்பத்திலும் பிரச்சினை உள்ளனவே!
ஒரு நபர் கோபப்பட்டாலும், மற்றவர்கள்
பெருந்தன்மையாகவும், அமைதியாகவும்
சமாதானமாகவும் நடந்து கொண்டால்
வராதே சண்டையும், சச்சரவும்.
முதலில் வீட்டில் அமைதி ஏற்பட
விட்டுக்கொடுத்து போவதே பெருந்தன்மையே!
வீடு, நகரம், நாடு, உலகம்
இப்படி ஒவ்வொரு இடத்திலும்
பேரொளி வீசிடவே ஏற்றிடுவோம்
வெண்மை நிற அமைதி என்னும் கொடியை!
மனதில் உள்ள இருண்ட சக்தியை நீக்கி
வெண்மை நிறப் புறாவை பறக்க விட்டு
உலகமெல்லாம் அமைதி என்னும்
ஒளி விளக்கை ஏற்றி மேன்மை பெறுவோமாக!
தியானம் மேற்கொண்டால் அமைதி உருவாகுமே!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# மலைப் பாதை

வாழ்க்கை என்பதே
ஒரு கரடுமுரடான,
நெளிவு சுளிவுகள்
இணைந்ததொரு
மலைப் பாதை!
பசுமையும் உண்டு
பள்ளத் தாக்குகளும்
உண்டு;
கவனத்தோடு
பிரயாணிப்போம்;
பயமின்றித்
தொடர்ந்திடுவோம்
ஏனெனில் கண்ணுக்கு
எட்டிய தூரத்தினில்
மேகங்களைத் தூதுவனாக்கி
நம் குறை களையவென
காத்திருக்கிறார்கள்
திருமலை, திருவண்ணாமலை
பழநி மலை, சபரி மலை
எனத் திக்கெட்டிலும்
மலைகளில் வாசம்
செய்து வரும் நமக்கான
அருட் தெய்வங்கள்!



கவிஞர் மலர் அபி

அகர முதல

# எதிர்பார்ப்புகள்

நகரும் நாட்களில்
நிகழும் தேடல்கள்
கனவுகளாகவே
முடிந்து விடுகின்றன
எதிர்பார்ப்புகள்
நிறைந்த
வாழ்க்கை பயணத்தில்.




கவிஞர் கீர்த்தனா பு

# கைம்பெண்

பெற்றெடுத்த அன்னை தன் கைகளால்
நெற்றியில் இட்ட அழகிய கோலம்
கட்டிய கணவன் காலனை சேர்ந்ததால்
அழிக்கப்பட்டு அந்தோ ஆனதே அலங்கோலம்

கவிஞனையும் கவி எழுத வைக்கும்
கண்ணாடி வளையல்களின் அழகிய சத்தம்
இனி கிடைக்காதோ ஒருநாளும்
இனிய அந்த அழகிய சத்தம்



கணவன் மட்டுமே கேட்டு ரசித்த
மனைவி மெட்டியின் மெல்லிய இசை
இனி எப்போதுமே எங்குமே கேட்டிடாதோ
அவனின் காதுகளில் அந்த இசை

அவள் வருவதை முன்னமே சொல்லும்
அழகிய கொலுசின் ரீங்கார சங்கீதம்
அழிந்ததே அனைத்தும் விதியின் கைவசம்
எப்போதுமே கேட்க இயலாத இன்னிசைகள்

விதியால் வலி பெற்ற அவளை
மேலும் வலி பெற செய்யாதீர்கள்
சடங்கு சம்பிரதாயங்கள் என்ற பெயரில்
மீண்டும் மீண்டும் அவளை வதைக்காதீர்கள்

வாழ்க்கை முழுவதும் துணையாய் வருவேன்
என்று உரைத்தவனின் மறைவுக்கு பின்னால்
சிறு வயதினில் இருந்தே கொண்ட
அவளின் ஆசை கனவுகளை கலைக்காதீர்கள்

உங்கள் கருத்துக்களை அவள்மீது திணிக்காதீர்கள்
அறிவுரை என்ற பெயரில் கொல்லாதீர்கள்

அவளுக்கும் மனதுண்டு புரிந்து கொள்ளுங்கள்
அவளுக்கும் எதிர்காலமுண்டு நினைவில் கொள்ளுங்கள்
அவளுக்காக கொடுக்கப்பட்ட அழகிய வாழ்க்கையிது
அவளாக வாழ வழி விடுங்கள்!

கவிஞர் ஜாய்ஸ் வசந்தராஜ், சென்னை

# அனுபவங்கள்

தவழும் குழந்தையாய் தடுமாறும் பொழுதில்
உலகம் அறிய உய்த்தவை புண்கள்
கல்வியின் பாதையில் சுற்றம் உணர
கால்கடுக்க நடந்தும் கடுமழையில் நனைந்தும்
வார்த்தைகளின் வழியே வாழ்வில் நுழைகையில்
ஏச்சும் பேச்சுமாய் இல்லாது சொல்லியே
காலை இடறிவிட கூடும் கூட்டம்
எரிமலை கனலெனவே எழுந்து நிற்கையிலே
வேலையின் குடையில் இளைப்பாற நிற்கையில்
பணிச்சுமையை ஏற்றிவிட்டு பரிகசிக்கும் சிலகூட்டம்
இளமையின் எல்லையில் இல்லறத்தில் அடிவைக்க
உறவுகளைப் பேணுதற்கு தனிப்பாடம் தேவையாக
பெற்றிடும் ஊதியத்தில் குடும்பத்தை பேணிடவே
கற்றிட்ட கல்வியும் கற்றுத்தராத அனுபவத்தில்
கரணங்கள் போடும் கழைக்கூத்தாடி போலே
பள்ளமும் மேடுமென இல்லறம் பறக்கையிலே
வாலிபத்தின் சுவைக்கெனவே வாரிசுகள் பிறக்கையிலே
கால்கட்டும் கைகட்டுமென நாளெல்லாம் உருண்டோட
விடியும் பொழுதுகளில் கிடைத்திடும் தெளிவுகளில்
விரியும் எழுத்துகளின் கவிதைகளில் ஒளிந்தபடி
அனுபவங்கள் ஆசைகளில் நடத்திச் செல்கின்றன
அழகிய வாழ்வின் வற்றா நதியை.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# புறங்கூறாமை

அதிகாரம் 19




புறம் பேசும் மனிதா - உன்னிடம்
அறம் இருந்தும் பயன் ஏது?

பிறர் குற்றம் காணும் மனிதா
உன் குற்றம் கண்டாயோ?

தன் குற்றம் கண்டோர்
பிறர் குற்றம் பேச மாட்டர்?

புறம் பேசி வாழும் மனிதா
நீ வாழ்வதைவிட இறப்பதே நன்றென.
பெரியோர்கள் வாக்கு

நேருக்கு நேர் வன்சொல் கொண்டு அறுத்தாலும்
ஒருவர் போனபின் புறம் பேசாதே
இது கொடும் பாவம் செயலாகும்

பொய்யாக நகைப்பதை விட
கொடிய தீங்கில்லையே

குற்றமில்லா மனித வாழ்வேது?
என அறிந்தாய் எனில் துன்பம் கை சேரா

ஆள்காட்டி விரலால்
அடுத்தவரின் குறைகளைச் சுட்டிக் காட்டும் மனிதனே
உன்னையே உன் விரல்களில்
மூன்று கை காட்டும் அறிவாயா நீ ?

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# தரிசனம்

வேண்டுதல்களே
இல்லாத
குழந்தைகளின்
கண்கள் மட்டுமே
உண்மையாக
கடவுளை
தரிசிக்கின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# திருமாலும் வைணவமும் (பகுதி 02)

இந்துமத ஆறுபிரிவு ஷட்மதங்கள்: சைவமதம்
சாக்தமொடு காணாபத்ய கவ்மாரம் வைணவமும்
சவ்ரமாமே! இந்துமதம் இந்தியத்தே தொன்மையும்
பெரும்பான்மை கொண்டதுவே! ஞாலப்பெருஞ் சமயங்களில்
மூன்றான இடமதற்கே! தொளாயிரத்து ஐம்பதின்மேல்
மில்லியன்பேர் இந்துக்கள் இந்தியத்தும் நேபாளம்
தன்னிலுமே பெரும்பான்மை வாழ்கின்றார்! மற்றுமவர்
தீவிலங்கை இந்தோநே சியத்தினிலும் மலேசியத்தும்
சிங்கைதனில் சூரிநாமில் பிஜித்தீவு அமெரிக்கா
கனடாவில் பூட்டானில் ஹாங்காங்கில் ஜப்பானில்
பரவலாக வாழ்கின்றார்! இந்துசமயக் குறியீடுகள்:
தாமரையும் ஸ்வஸ்திகாவும் ஓம்என்பது தீபமொடு
திரிசூலம் என்பவையே! நூல்களெனில்: வேதங்கள்
உபநிடதம் புராணங்கள் இதிகாசம் என்பவையாம்!
இந்துக்கள் பேசுமொழி பற்பலவாம்! அன்னவைகள்:
தொல்தமிழும் சமக்கிருதம் கன்னடமும் ப்ராகிருதமும்
பஞ்சாபியொடு குஜராத்தி இந்தியதும் மலையாளம்
சுந்தரஞ்சேர் நற்றெலுங்கு மராத்தியதும் ஒரியாவும்
வங்கமொழி காஷ்மீரி நேபாளி அஸ்ஸாமி
துளுவோடு கொங்கணியும் என்பனவாம்! இந்துமதம்
எவராலும் தோற்றுவிக்கப் பட்டதன்று! நெறிப்படுத்த
கட்டுப்படுத் திடுதற்கு மையவமைப்பு ஏதுமில்லை!
கட்டமைக்க அடிப்படைகள்: நம்பிக்கை சடங்குகளும்
சமயநூல்கள் மட்டிலுமே! தோன்றியதோர் காலமெனில்
வேதகால முகிழ்த்திட்ட போதிருந்தே! ஐநூறு
ஆண்டுமுன்பே கல்வெட்டில் சிவனுருவும் சிலைகளதும்
ஓவியங்கள் கொண்டதுவே! இந்துமதம் நின்றிலங்க
நம்பிக்கை அன்புறுதி செயல்பாடு தன்னுணர்வு
சகிப்பென்னும் பண்பெல்லாம் காரணமே! பேராழி
மூழ்கிட்டேன் முத்தெடுக்க! ஆதிமூலம் நற்றுணையே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# அன்னை

அம்மா எனும் போதே
அங்கத்திலே அன்பின் சிலிர்ப்பு
மாதா பிதா குரு தெய்வம் எனும்
வரிசையில் முதலிடம் உனக்கே.

அணைக்கும் தூரமதில் நீ இல்லாது போயிடினும்
ஆத்மார்த்தமாய் உனை அணைக்கிறேன்
என் நினைவாலே!

தரிசாய் நான் போக விட்டுவிடாது
விளை நிலமாய் மாற்றிட்டாய்.
களிமண்ணாய் கிடந்திட்ட என்னை
சிலையென மாற்றிட்டாய்.

கள்ளமில்லா அன்பிலே
காலமெல்லாம் காத்திடுவாய்.
கடவுளைக் கண்டதில்லை நானும்
உனைக் கடவுளாய்க் கண்டதினாலே!

அன்பும் பாசமும் அரவணைப்பும் அனுசரணையும்
பொறுப்பும் தைரியமும் கலந்திட்ட
மொத்தக் கலவை நீயே!



ஆலமரத்தின் ஆணி வேராய் நீயும்
வழி நடத்திட நானோ காற்றில் அசைந்திடும்
இலையாய் மகிழ்கிறேனே.

எனக்கான பணிவிடைகள் நீ செய்திட
ஒருநாளும் முகம் சோரவில்லையே நீ
உன் சேயாய்ப் பிறந்ததை எண்ணி
பூரித்துப் போகிறேன் நிதமுமே!

எத்தனை ஜென்மம் எடுப்பினும்
என் தாயாய் நீயே வந்திட
என்றென்றும் இறைவனைப் பிரார்த்தித்திடுவேனே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# ஓசோன் படலம் காப்போம்!

உயிரினங்கள் வாழ உறுதுணையாய்த் திகழும்
பூமிப்பந்தின் போர்வைதான், ஐந்து அடுக்குகளாய்த்
திகழ்ந்திடும் வளிமண்டலம்! அடிவளி மண்டலம் ,
மீவளி மண்டலம், நடுவளி மண்டலம்,
வெப்ப மண்டலம். வெளி மண்டலமென
ஐந்து அடுக்குகளைக் கொண்டதே வளிமண்டலம்!
மீவளி மண்டலத்தின் அடிப்பகுதியில் அமைந்து
போர்வைபோல் புவியினைக் காப்பது ஓசோனாம்!
புவியின் மேற்பரப்பில் இருபது முதல்
அறுபது கிலோமீட்டர் உயரம் வரைபரவி
சூரியஒளியின் புறஊதாக் கதிர்களை வடிகட்டும்
அற்புதத்தை நிகழ்த்தி உயிர்களைக் காக்கின்ற
ஓசோன் படலம், தன்னைத் தான்காக்கும்
தன்மையற்றது! குளோரோ புளூரோ கார்பன்,
மீத்தைல் குளோரோபார்ம் மற்றும் கட்டுறா
அயனிகள் உருவாக்கும் ஓசோனில் ஓட்டைகளை!
ஓட்டைகள் வழியாக ஊடுருவும் புறஊதாக்
கதிர்களால் மனிதர்க்குக் கொடும் நோய்கள் !
காலநிலை மாற்றங்களும், கடல்நீர் மட்டம்
உயர்தலும், பயிர்களில் உருவாகும் பாதிப்பால்
உணவுச் சங்கிலி சீர்குலைதலும் நிகழ்ந்திடுமே!
இதைத் தடுக்க என்ன வழியென்றால்
சூழல் நட்பற்ற பொருட்களைத் தவிர்த்தல்
ஆற்றல் குறைவான மின்பல்புகள் பயன்படுத்தல்
சிற்றுந்து மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளைக்
குறைப்பதும் பலனளிக்கும்! மரங்களை வளர்ப்பதால்
காற்று மண்டலத்தில் பெருகிடும் உயிர்வளியும்!
ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் பதினாறு
ஓசோன் தினமாக உலகளவில் அமைகிறதே!
ஒன்றிணைந்து செயல்படுவோம்! ஓசோன் காப்போம்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# இரா.மதிராஜ் கவிதைகள்

இந்த பூக்கள்
மட்டும் எப்படி ?
ஒரே பூக்களில் இருந்து
நல்லது, கெட்டதுக்கு என
இரு வாசனையை
கொடுக்க முடிகிறது ?

*

அந்த வளர்பிறையைச்
சுற்றி
வரையப் பட்டிருக்கும் ?
மேகக் கூட்டங்கள்
நிலாவுக்கான பின்புலத்தை
ஏதோ ஒரு வகையில்
அழுத்தமாக தான்
காட்டுகிறது



*

சுழன்றடிக்கும்
அந்த எதிர் காற்றை
எதிர்த்து
தென்னை மரத்தின்
கீற்றுகள் அனைத்தும்
ஒற்றுமையாகதான்
போராடுகிறது,
என்னே
இத்தனைப் பெரிய வானம்
வெறும் வேடிக்கை மட்டும்
தானேப் பார்க்கிறது ?

ஜன்னலுக்கு வெளியே
நின்று கண்ணாடியைக்
கொத்தும் பறவையொன்று தான்
தொலைத்தக் காட்டைப்
பற்றியக் கவிதையொன்றை
எழுதி விட துடிக்கிறது.

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# கட்டை மொய்

மத்தியான வேளை, எப்போதும் போல் ஒரு மாணவன். கவலையுடன் இருந்தான். அவனைச் சுற்றி பல மாணவர்கள்.




நானும் எப்போதும் போல், "ஏன்டா சோகமாய் இருக்கே?" என கேட்டேன்.
உடனே அருகாமை மாணவர்கள். "சார்.. அவன் பாட்டி மேல போயிட்டா" என்றான்.

உடனே நான், "அவன் சோகம் அவனுக்கு, அதுல நீ, வேற மேல போயிட்டா, கீழ போயிட்டா என சொல்லுக" என்றேன்.

அருகாமை மாணவர்கள், 'உடல் மண்ணுக்கு,உயிர் வானுக்கு' என்றார்கள்.
சுற்றி சுற்றி பார்த்தேன்.

அவர்கள் தலைகளில் அழகிய ஒளி வட்டம் அங்கிகரித்தது. லேசாய் சிரித்துக் கொண்டே அந்த மாணவனிடம், "உங்க பாட்டி இறந்து போச்சா" என்றேன்.
"இல்லை, சார். எங்க பாட்டிக்கு தங்கச்சி" என்றான்.
"ஒங்கிட்ட அவங்க பாசமா?" என கேட்டேன்.
"ஆமா சார். இறந்ததை கேட்டவுடனே, என்னை அறியாம, இரண்டு சொட்டு கண்ணீர் வந்தது.
பிறகு, எடுக்கப்போ இரண்டு சொட்டு விட்டேன்.
உடனே, கட்டை மொய் எழுத சொல்லிட்டாங்க சார் என்றான்.
எனக்கு உடனே வியப்பானது.
டேய் கலியாண மொய் கேட்டுருக்கேன், அது என்ன கட்டை மொய்? என்றேன்.
இன்னொருத்தன், சார், அது கடைசி மொய் என்றான்.

# கட்டை மொய்

உடனே, இவன் "ஊர்காரங்க எல்லாரும் மொய் வைப்பாங்க சார். ஒரு ஆளுக்கு இருபது ரூபா சார். அத நோட்டு எழுதுவாங்க சார்.

அத நான் தான் எழுதினேன். இரண்டாயிரம் பிரிஞ்சது சார்" என்றான்.

"டேய் அதுக்கு மேல, மொய் எழுதமாட்டங்களா?" என்றேன்.

"கல்யாணத்துக்கு எழுதவா சார்"

"கட்டை மொய் இவ்வளவுதான்"

"சரி. கட்டை மொய் என ஏன் பெயர் வந்தது?" என்றேன்.

"சார், இது தெரியாதா?"

செத்த பிறகு உடம்பு கட்டை தானே சார். உயிர் போயிரும் இல்ல அதான் கட்டை மொய் என எனக்கு பாடம் எடுத்தான். உடனே, அடுத்த கேள்வியைக் கேட்டேன்.

டேய் இங்க பொம்பளக கொள்ளி வைப்பாங்களா என்றேன்.

இல்ல சார். பொம்பளக முச்சந்தியில குடம் உடைப்பாங்க.ஆம்பிளைங்க சுடுகாட்டுல கொள்ளி வைப்பாங்க.

'அப்படியாடா' என கண் விழித்தேன்.

எங்க ஊர்கள்ல, எல்லாமே ஆம்பிளைக்குத்தான் எல்லாமே என்றேன்.

மேலும், எனக்கு கிடைத்த 'கட்டை மொய் தவகலோடு நடந்தேன். கூடவே குடம் உடைப்பும் கிடைத்தது.

சில நேரங்களில் மாணவர்களும் ஆசிரியர் ஆகின்றனர்.

இராஜேஷ் சங்கரப்பிள்ளை

# வாழ்க்கை என்னும் கவிதை

**நவீனம்** **அத்தியாயம். 3**

## என் வாழ்வில் செய்த முதல் நல்ல காரியம்!



எவ்வளவு அருமையான மனிதன். ஒரு அதிர்வு பேச்சுக்கூட இல்லாமல் இவனால் எவ்வளவு எளிமையாக அமைதியாக பேச முடிகிறது. ஒரு சாதாரண மனிதன் இந்த நேரத்தில் எவ்வளவு திட்டித் தீர்த்து விட்டு அலைந்து கொண்டே போயிருப்பான். போனது வராது என்ற எண்ணம் எத்தனை பேருக்குள்ளே இந்த மாதிரி நேரத்திலே எழும்?.

அங்குமிங்கும் தேடி என்னையும் திட்டி பரிதவித்துப் போகமாட்டானா? எவ்வளவு திட்டினாலும் அலைந்தாலும் நடக்கக் கூடியதுதான் நடக்கும் என எந்த ஒரு அதிர்வும் ஆத்திரமும் இல்லாமல் எப்படி அமைதியாக போக முடிகிறது.

சிவா, கடவுள் என் வாழ்வில் செய்த முதல் நல்ல காரியம் என்னவென்றால் உன்னை எனக்கு துணையாகக் கொடுத்ததுதான். உங்களைத் திருமணம் செய்த அன்றே எனக்குள் என்னைத் தெரிய வைத்து உங்களையும் புரிய வைத்தீர்களே.

என்னை ஒரு வேலைக்காரியாகவோ உயிருள்ள மண்பாண்டமாகவோ பார்க்காமல் ஒரு நல்ல சிநேகிதியாக மதிக்க ஆரம்பித்த என் வாழ்க்கையின் வழித்துணையே. உன்னை எனக்கு வழங்கியதற்கு அந்த ஆண்டவனுக்கு அநேக கோடி நமஸ்காரங்கள்.

''மசமசன்னு நிக்காம கைப்பையைத் தேடிப்பாரேண்டி. மாப்பிள்ளை எவ்வளவு நல்லவரா இருந்ததாலே ஒழிஞ்சே. இதே உங்க அப்பாவா இருந்திருந்தா உண்டு இல்லேண்ணு பண்ணிருப்பார்'' என்றாள் அம்மா.

''பையை உள்ளே எடுத்துட்டு வந்தேன். ஆனால் எங்கே வச்சேண்ணுதான்.... ஆங்... திவாகர் கிட்ட கொடுத்த ஞாபகம் தானிருக்கு'' என்று எழுந்தவள் தம்பி திவாகரனைத் தேடினாள்.

மேல் படுக்கையில் பெட்டியைத் திறந்து லுங்கி எடுத்த திவாகர் ''என்னக்கா? என்ன தேடறீங்க?'' என்றான்.

**இரஜகை நிலவன்**

# வாழ்க்கை என்னும் கவிதை

நவீனம் அத்தியாயம். 3

## என் வாழ்வில் செய்த முதல் நல்ல காரியம்!

திரும்பி வந்த சிவா, திவ்யாவை புவனாவிடம் கொடுத்து விட்டு ''உங்கக்கா கைப்பையை எங்கேயோ மறந்து வச்சிட்டு வந்துட்டாடா.. அதிலேதான் இரயில் டிக்கெட்டும் பணமும் இருக்கிறது'' என்றான்.

கீழே நின்றுகொண்டிருந்த அம்மா ''அக்கா கைப்பையை உன்கிட்ட கொடுத்தாளா?'' என்றாள்.

''எங்கிட்டே தரவில்லையே'' என்றான் திவாகர்.

''சரி போகட்டும் விடு'' என்றான் சிவா.

''இதோ இங்கே இருக்கிறது. அக்காதான் இங்கே பையை வைத்திருக்கா'' என்று எதிரிலே மேல் படுக்கையிலிருந்த கைப்பையை எடுத்துக் கொடுத்தான் திவாகர்.

"இப்பதான் உயிர் வந்த மாதிரி இருக்கு. இப்படி அசடு மாதிரி எதையும் கண்ட இடத்தில் வச்சிண்டு நின்று தவிக்காதே...." என்று அம்மா இரைந்தாள்.

''வீணாக ஏன் அத்தை அவளைத்திட்டுகிறீர்கள்?. பாவம் தூக்கக் கலக்கத்தில் பையை மேல் படுக்கையில் வைத்ததை மறந்து போயிருப்பாள்.

'' அத்தா... பலூன்'' என்று பிளாட்பாரத்தில் பலூன் விற்றுக் கொண்டிருந்தவனை காட்டினாள் திவ்யா.

''வாங்குவோமா?'' என்றாள் புவனா.

மும்பையிலே வீடெல்லாம் சின்னதாதானிருக்கும். சமாளிச்சுக்கணும். எல்லாம் எப்பவும் சுத்தமா வச்சுக்க பழகிக்கோ. உனக்கு அதிகமாகச் சொல்லித்தர வேண்டியதில்லே. முக்கியமா இந்தச் சின்ன குழந்தையை நீ ஜெயிச்சாகணும். அதுதான் மிக முக்கியம்"

அடுத்த முறை நீ ஊர் வரும்போது உனக்கு குழந்தை பொறக்குதோ இல்லையோ அதைப்பத்தி எனக்கு கவலையில்லை. திவ்யா உன்னைப் பார்த்து அம்மாண்ணு கூப்பிடணும்.''

"நான் முயற்சி பண்ணுகிறேனம்மா. சில நேரங்களில் திவ்யா முரண்டு பண்ணினா கூட அவர் என்னைத் திட்டறதில்லே. அதைப் பார்க்கும் போதுதான் என்னவோ என்னையே அடித்த மாதிரி ஒரு வலி வருகிறது.''

"....................''ஒன்றும் சொல்லாமல் அம்மா முறைத்துப் பார்த்தாள்.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## நவீனம் அத்தியாயம். 3

### என் வாழ்வில் செய்த முதல் நல்ல காரியம்!

''சின்னக் குழந்தை அடம் பிடிக்கத்தான் செய்யும். தப்பு செய்யத்தான் செய்யும். எனக்குக் கூட கோபம் வரும். நான் கோபப்படக் கூடாது என்பதற்காக அவரே அவளை அதட்டுவதும் மிரட்டுவதும் பார்க்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது.''

மற்றபடி அவரைப்போல ஒரு நல்ல மனிதன் கிடைப்பது கஷ்டம் அம்மா. திவ்யாவை கண்டிப்பாக ஜெயித்துதான் ஆக வேண்டும். முயற்சி செய்கிறேன் அம்மா.

''வடை போண்டா காபி'' வியாபாரம் செய்கிறவன் கூவிக்கொண்டே போக ''திவ்யா கண்ணுக்கு வடை வேணுமா?'' என்றாள் புவனா.

''ம்கூம்'' என்று அவள் மடியிலிருந்து இறங்கியவள், ''அப்பா வடை வாங்கு'' என்றாள்.

''பாரும்மா இதைத்தான் என்னாலே தாங்க முடியவில்லை.'' என்றள் புவனா மறுபடியும்.

''பொறு புவனா. குழந்தை இன்னும் உன்னில் ஒட்ட வில்லை. அவளை நீ கொஞ்சம் கொஞ்சமாக உன் பக்கம் இழுக்க வேண்டும். அவள் தன்னுடைய அம்மாவிடம் என்னவெல்லாம் எதிர்பார்த்தாளோ அதையெல்லாம் நீயாக அவளுக்கு தரவேண்டும். அப்போது அந்தக் குழந்தை உன்னிடமே ஒட்டிக்கொள்ள ஆரம்பிக்கும். தகப்பனை தேடாது'' என்றாள் அம்மா.

''ஏ... வடை... நான்கு வடை கொடப்பா'' என்று கூப்பிட்டான் சிவா.

பையிலிருந்து பணம் எடுத்து கொடுத்து விட்டு ''அம்மாவிற்கும் பாட்டிக்கும் வடை கொடு'' என்றான் சிவா.

''எங்களுக்கு எதற்கு மாப்பிள்ளை வடை?. '' என்றாள் புவனாவின் அம்மா.

''பரவாயில்லை அத்தை சாப்பிடுங்கள். திவ்யா அவர்களிடம் கொண்டு கொடும்மா'' என்றான்.

''ம்கூம்.. நான் தரமாத்தேன்.'' அடம்பிடித்தாள் திவ்யா.

''திவ்யா நீ எல்லாம் சாப்பிட மாட்டே, அம்மாவிற்கும் பாட்டிக்கும் வடை கொடு'' என்று தலையில் தட்டினான் சிவா.

''வீணாக ஏன் அடிக்கிறீர்கள்'' என்று புவனா திவ்யாவை தூக்க முயன்றாள். அவள் வர மறுத்து திரும்பவும் சிவாவின் கால்களைக் கட்டிக்கொண்டாள்.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## நவீனம் அத்தியாயம். 3

### என் வாழ்வில் செய்த முதல் நல்ல காரியம்!

புவனாவிற்கு என்னவோ போலிருந்தது. திரும்பவும் அந்தப் பக்கம் வந்த வடைக்காரனிடம் ''இன்னும் நாலு வடை கொடு தம்பி'' என்று பணம் தந்தான் சிவா.

''நாங்க என்ன சின்ன பிள்ளைகளா, வடை சாப்பிடுவதற்கு?'' என்று வாங்க மறுத்தாள் புவனாவின் அம்மா.

''பரவாயில்லை அத்தை சாப்பிடுங்கள்'' என்று வடையை அத்தையிடம் கொடுத்து விட்டு திவ்யாவைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டான்.

''அப்பா பயமாயிருக்கு. ஏன் அடிச்சே?'' என்றாள் திவ்யா.

''திவ்யா கன்னுகுட்டி, நீ எல்லாத்தையும் திங்கப்போறதில்லை. ஒழுங்கா அம்மாவுக்கும் பாட்டிக்கும் கொடுத்திருக்கலாமில்லே''

''நீ கேட்டா தர்றேன். அத்தாவுக்கும் பாடிக்கும் ஏன் தரணும்?'' பிடிவாதம் பண்ணியது குழந்தை.

''திவ்யாவிற்கு எப்படி புரிய வைக்கப்போகிறேன்'' அசதியோடு படுக்கையில் சாய்ந்தான் சிவா.

தொடரும்...

இரஜகை நிலவன்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# சித்தி ஜுனைதா பேகம்

## கட்டுரை



இஸ்லாத்தில் ஆணுக்கு ஒரு நீதியும் பெண்ணுக்கு ஒரு நீதியும் கிடையாது. ஆண் மகனுக்கு ஆகும் என்றால் பெண் மகளுக்கும் ஆகும் என 70 ஆண்டுகளுக்கு முன்பே பெண்ணுரிமை பேசிய தமிழின் முதல் இஸ்லாமிய பெண் எழுத்தாளர் சித்தி ஜுனைதா பேகம்.

### பிறப்பு:

சித்தி ஜுனைதா 1917-ம் ஆண்டு ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகூரில் பிறந்தவர். தந்தை ஷரீப் பெய்க் ஒரு பன்மொழி அறிஞராகவும், மேடைப் பேச்சாளராகவும் அப்பகுதியில் பிரபலம். தந்தை கல்வியாளராக இருந்தாலும், அந்நாளில் கல்வி கற்பதில் இஸ்லாமிய பெண்களுக்கு இருந்த கடும் கட்டுப்பாடுகளினால் சித்தி ஜூனைதா பேகம் 3-ம் வகுப்பு வரை மட்டுமே பயில முடிந்தது. இருப்பினும் இயற்கையான எழுத்தின் மீதான ஆர்வமும் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும், அவரை 16 வயதில் எழுத்துத் துறைக்கு கொண்டுவந்தது.

### வாழ்க்கைச் சுருக்கம்:

பெண்கள் தனித்துவமாக இயங்கும் சூழல் அதிகரித்த இந்நாளிலும் இஸ்லாமிய சமூகத்தில் இருந்து இலக்கியப் பணியாற்றுபவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே. இந்த நிலையில் சுதந்திரத்திற்கு முந்தைய, பிற்போக்குத் தனம் நிரம்பி வழிந்த அக்காலத்தில் ஒரு தமிழ் இஸ்லாமிய பெண் துணிச்சலாக எழுத்துலகிற்கு நுழைந்தது ஆச்சரியமானது.

இவர் தனது 12வது வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். நான்கைந்து ஆண்டுகளே நீடித்த அந்தத் திருமண வாழ்க்கையில் நான்கு குழந்தைகளுக்குத் தாயானார். பதினேழாவது வயதிற்குள்ளேயே விதவையானார்.

# சித்தி ஜுனைதா பேகம்

## கட்டுரை

**எழுத்துலக வாழ்வு:**

**சித்தி ஜுனைதா பேகம் மூன்றாம் வகுப்பு வரையே கற்றிருந்தார். இவர் தாருல் இஸ்லாம் என்ற இதழைப் படித்துத்தான் செந்தமிழைக் கற்றுக் கொண்டார். திருமணத்திற்குப் பிறகு தனது பதினாறாவது வயதில் எழுதவும் தொடங்கினார். பிற்காலத்தில் நிறையச் சிறுகதைகளும், பெருங்கதைகளும் எழுதினார்.**

**இவர் எழுதிய முதல் சிறுகதை, 1929ல் தாருல் இஸ்லாம் இதழில் வெளிவந்தது. தாருல் இஸ்லாம் வாசகியான இவர் தனது முதல் சிறுகதையை முஸ்லிம் பெண்களின் உரிமைக்குப் போராடிய தாவூத் ஷாவுக்கு அனுப்பி வைத்தார். ஒரு பெண் எழுதிய சிறுகதை என்றதும், தாவூத் ஷாவுக்கு ஆச்சரியம். ஆனந்தம். முஸ்லிம் பெண்கள் கூடக் கதை எழுதத் தொடங்கி விட்டார்கள் என்று பெருமிதத்துடன் சிரித்தார். அந்தக் கதையை தாருல் இஸ்லாம் இதழில் உடனே வெளியிட ஏற்பாடு செய்தார்.**




**குடும்பப் பின்னணி:**

**சித்தி ஜுனைதா பேகம் எம். ஷரீப் பெய்க், முத்துகனி தம்பதிகளின் மூத்த புதல்வி. இவருக்கு நான்கு சகோதரர்கள். இவரது மூத்த சகோதரர் சிறந்த பேச்சாளரும் பலமொழிகள் அறிந்த அறிஞருமான ஹுசைன் முனவ்வர் பெய்க். இரண்டாவது சகோதரர் காரைக்காலில் பால்யன் என்ற பத்திரிகையை பல ஆண்டுகள் வெற்றிகரமாக நடத்திய முஜீன் பெய்க். மற்றைய இரண்டு சகோதரர்களும் இறந்து விட்டனர். இவரது தாத்தா தென் தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் குழுத் தலைவராக இருந்த மு.யூ. நவாபு சாகிபு மரைக்காயர்.**

# சித்தி ஜுனைதா பேகம்

## கட்டுரை

**ஊ.வே.சா:**



இந்த நாவலுக்கு மதிப்புரை வழங்கிய உ.வே.சா, ''மகம்மதியர்களுள்ளும் தமிழ் நூல்களைப் பயின்றுள்ள பெண் மக்கள் இருக்கிறார்கள் என்பதை இப்புத்தகம் நன்கு விளக்குகிறது. எல்லாவற்றிலும் மேலானது கடமையே என்பதும், பரோபகாரச் செயல் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததென்பதும், பொருளாசை மேலிட்டவர்கள் எதுவும் செய்யத் துணிவர் என்பதும் இப்புத்தகத்திற்கண்ட முக்கிய விஷயங்கள்.

இதன் நடை யாவரும் படித்தறிந்து மகிழும்படி அமைந்திருக்கிறது. கதைப் போக்கும் நன்றாக உள்ளது. இடையிடையே பழைய நூல்களிலிருந்து மேற்கோள்கள் கொடுத்திருப்பது இந்நூல் எழுதியவருக்குத் தமிழ் இலக்கிய நூல்களில் நல்ல பயிற்சியுண்டென்பதைக் காட்டுகிறது. பொதுமக்கள் இதனை வாங்கிப் படித்து இன்புறுவார்களென்று எண்ணுகிறேன்'' என்று எழுதியிருந்தார்.

**வெளிவந்த நூல்கள்:**

- காதலா கடமையா - நாவல் (1938)
- செண்பகவல்லிதேவி அல்லது தென்னாடு போந்த அப்பாஸிய குலத்தோன்றல் - நாவல் (1947)
- மகிழம்பூ -நாவல்
- இஸ்லாமும் பெண்களும் - கட்டுரைத் தொகுப்பு (1995)
- மலைநாட்டு மன்னன் - தொடர்கதை
- ஹலிமா அல்லது கற்பின் மாண்பு
- பெண் உள்ளம் அல்லது கணவனின் கொடுமை
- திரு நாகூர் அண்ணலின் திவ்ய மாண்பு - வாழ்க்கை வரலாறு (1946)
- காஜா ஹஸன் பசரீ (ரஹ்) - முஸ்லிம் பெருமக்கள் வரலாறு

# சித்தி ஜுனைதா பேகம்

## கட்டுரை

**இறப்பு:**

**தம் இறுதிக்காலம் வரை படிப்பதையும் எழுதுவதையும் கைவிட்டுவிடாமல் இலக்கியப்பணி ஆற்றிய சித்தி ஜுனைதா, 1998 ஆம் ஆண்டு இதேநாளில் தம் 82 வயதில் உடல்நிலை பாதிக்கப்பட்டு மரணமடைந்தார்.**




அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
கிடைக்காததை நாம் துரத்துவதும்
கிடைத்ததை மதிக்காததும்தான்
“வாழ்க்கை”
Aagaramuthalaa
www.அகரமுதல.com

**அகமும் தமிழே!** **முதலும் தமிழே!!**

**"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு**
**தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு**
**கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"**

**என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,**

**அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை**
**அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.**


**தொடர்பிற்கு:**

**9597887847/8870884969**

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com